# செய்தி வெளியீடு

## சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இ.எஸ்.ஐ ஓய்வூதியம்

தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் சார்பாக கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்கு இடர் ஏற்படும் காலங்களில் பணம் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

பல்வேறு பணப்பயன்களின் ஒரு அங்கமாக நீண்ட கால உதவித்தொகை (ஓய்வூதியம்) பயனீட்டாளர்களுக்கும் அவர்தம் சார்ந்தோருக்கும் வழங்கப்படுகிறது. இவ்வாறான நிரந்தர உடல் ஊன உதவித்தொகை மற்றும் சார்ந்தோருக்கான உதவித்தொகை பணியில் சேர்ந்த முதல் நாளிலிருந்தே வழங்கப்படுகிறது. இந்தப் பண உதவிகள் காப்பீட்டாளர் சார்ந்த கிளை அலுவலக மேலாளரின் முயற்சியால் குறைந்த கால அளவில் விசாரிக்கப்பட்டு உதவித்தொகை நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

இன்றைய தினம் கோவை திருச்சி ரோடு, ராமநாதபுரத்தில் அமைந்துள்ள இ.எஸ்.ஐ சார் மண்டல அலுவலகத்தில், காட்டூர் மற்றும் ஒண்டிப்புதூர் கிளை அலுவலகத்துடன் இணைந்த கீழ்க்கண்ட இரண்டு சார்ந்தோருக்கான உதவித்தொகையும், இரண்டு நிரந்தர உடல் ஊனத்திற்கான பணம் வழங்கும் ஆணையும் வழங்கப்பட்டது.

1) கோவை இ.சி.ஐ சிஸ்டம் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் உற்பத்தி பொறியாளராக பணிபுரிந்து பணியின் போது மறைந்த திரு தேவதாஸ் அவர்களின் சார்ந்தோருக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூபாய் 8,712/-ம்,
2) கோவை ஸ்ரீ அன்னை அரவிந்த் கேஸ் சர்வீசஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து பணியின் போது மறைந்த திரு.எசக்கிராஜா அவர்களின் சார்ந்தோருக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூபாய் 3,681/- ம்,
3) கோவை ஸ்ரீ யோகினி டிரஸ்ட் ஈஷா பவுண்டேஷன் நிறுவனத்தில் பணிபுரிந்து நிரந்தர உடல் ஊனமுற்ற திருமதி வினிஷா அவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூபாய் 1,607/- ம்,
4) கோவை தர்மிக் புட்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து நிரந்தர ஊனமுற்ற திரு.முத்து மாடசுவாமி அவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ 840/-வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் இ.எஸ்.ஐ சார் மண்டல அலுவலகத்தின் பொறுப்பு இயக்குனர் கே.ஆர்.ரவிக்குமார் மற்றும் இதர அதிகாரிகளும் முன் நின்று நடத்தினர். மேலும்பண உதவி ஆணையைப் பெற்றுக் கொண்ட சார்ந்திருப்போரும் காப்பிட்டாளர்களும் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்திற்கும்அவர்தம் அலுவலர்களுக்கும் கண்ணீர் மல்க நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வில், குறிப்பிட்ட தொழிற்சாலையின் மனித வள மேம்பாட்டு துறை அதிகாரிகளும், பலன் அடைந்தோரின் குடும்பத்தினரும் கலந்து கொண்டு தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் பல்வேறுபலன்களை பற்றிதெரிந்து கொண்டனர்.


தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம்
Shot on OnePlus
Kishore


தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம்
சார் மண்டல அலுவலகம் , கோயம்புத்தூர் – 641 045.
कर्मचारी राज्य बीमा निगम
उप – क्षेत्रीय कार्यालय, कोयम्बटूर - 641 045
Shot on OnePlus
Kishore